இந்திய ஒருமைப்பாட்டைச் சிதைக்கும் தேசவிரோதிகள் யார் ?

தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்...

2ஆம் பக்கத் தொடர்ச்சி

இரண்டு இயக்கங்களும் செயல்பட்டன. 1952 ஆகஸ்ட் முதல் தேதி அன்று திருச்சி ரயில்வே சந்திப்பின் ஒரு பகுதியில் இருந்த பெயர்ப்பலகையில் இந்தி எழுத்துகளைத் தந்தை பெரியார் அழிக்க, மற்றொரு பகுதியில் இருந்த பெயர்ப் பலகையில் முத்தமிழறிஞர் கலைஞரும் அவருடன் ஊர்வலமாக வந்த தி.மு.கழகத்தினரும் இந்தி எழுத்து

> **இந்திய ஒன்றியத்தின் பன்முகத் தன்மையையும் மொழிவழிப் பண்பாடுகளையும் குலைப்பவர்கள் தான் உண்மையான தேசவிரோதிகள்.**

களை அழித்தனர். இத்தகைய தொடர் போராட்டங்களுக்குப் பிறகே, ரயில் நிலைய பெயர்ப் பலகைகளில் முதலிடத்தில் இருந்த இந்தி எழுத்துகளுக்குப் பதிலாக, தமிழ் முதலிடம் பிடித்தது.

அந்தந்த மாநில ரயில் நிலையங்களிலும் அவரவர் தாய்மொழி முதன்மையாகவும், இந்தி எழுத்துகள் அடுத்ததாகவும், ஆங்கிலம் மூன்றாவதாகவும் இருக்கிறதென்றால் அதற்கு திராவிட இயக்கம் முன்னெடுத்த மொழிப் போராட்டமே காரணமாகும். தமிழை மட்டுமல்ல, இந்தி ஆதிக்கத்திடமிருந்து மற்ற மாநிலத்தவர்களின் தாய்மொழியையும் காப்பதற்கு திராவிட இயக்கத்தின் உறுதியான இந்தி ஆதிக்க எதிர்ப்புணர்வே முதன்மையாக உள்ளது.

இந்திய அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்தபின், 15 ஆண்டுகளில் இந்தியை மட்டுமே ஆட்சிமொழியாக நிறுவுவதற்கான சட்டப்பிரிவுகளை முன்வைத்து, அதற்கான நடவடிக்கைகளை அன்றைய ஒன்றிய அரசு முயன்றபோது, 1957ஆம் ஆண்டில் முதன் முதலாகத் தேர்தல் களம் கண்டு, இரண்டு உறுப்பினர்களுடன் நாடாளுமன்றத்தில் நுழைந்தது திராவிட முன்னேற்றக் கழகம். நம் இயக்கத்தின் மக்களவை உறுப்பினர்களான திருவண்ணாமலை தருமலிங்கமும், சொல்லின் செல்வர் ஈ.வெ.கி.சம்பத்தும், பிரதமர் நேரு இருந்த அவையில் இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து முழங்கினர்.



"இந்தியா என்பது ஒற்றை நாடல்ல, இது ஒரு துணைக் கண்டம். பல

> **தி.மு.க ஒரு போராட்டத்தைக் கையில் எடுத்தால் இந்தியாவை ஆட்சி செய்பவர்கள் அஞ்சுகிறார்கள்–அலறுகிறார்கள்.**

மொழிகளைப் பேசும் தேசிய இனங்களைக் கொண்ட நிலப்பரப்பு" என்பதை ஒட்டுமொத்த மக்களும் உணர்ந்துகொள்ளும் வகையில் நாடாளுமன்றத்தில் முதன்முதலில் உரக்க முழங்கிய இயக்கம் நம் தி.மு.கழகம். அதன் விளைவாகத் தான், **"இந்தி பேசாத மாநில மக்கள் விரும்புகிற வரை ஆட்சிமொழியாக ஆங்கிலம் நீடிக்கும்"** என்ற உறுதி மொழியை பிரதமர் நேரு வழங்கினார். தென்னிந்திய மாநிலங்கள் மட்டுமின்றி, அசாம், மேற்குவங்கம் போன்ற மாநிலங்களைச் சேர்ந்தவர்களும் ஆட்சிமொழி என்ற பெயரில் இந்தி ஆதிக்கத்தை எதிர்த்துக் குரல் எழுப்பினர். பிரதமர் நேரு, தனது உறுதி மொழி மீறப்படாது எனக் கடிதம் வாயிலாக உறுதி செய்தார்.

தி.மு.க.வின் நாடாளுமன்ற உறுப்பினரான ஈ.வெ.கி.சம்பத் அவர்களுக்கு 1960ஆம் ஆண்டு பிரதமர் நேரு உத்தரவாதம் அளித்து எழுதிய கடிதத்தை, சென்னை கடற்கரையில் நடந்த கழகப் பொதுக்கூட்டத்தில் இலட்சக்கணக்கில் திரண்டிருந்த மக்களின் முன் வெளியிட்ட பேரறிஞர் அண்ணா,

"என் தம்பிக்கு வாக்குறுதியை வரைந்துள்ள இந்தக் கரம், (அமெரிக்க ஜனாதிபதி) ஐசனோவரோடு கை குலுக்கிய கரம், ட்ரூமனோடு கைகுலுக்கிய கரம்,

> **நமது தொடர் போராட்டங்களுக்குப் பிறகே, ரயில் நிலைய பெயர்ப் பலகைகளில் முதலிடத்தில் இருந்த இந்தி எழுத்துகளுக்குப் பதிலாக, தமிழ் முதலிடம் பிடித்தது.**

(எகிப்து) நாசரோடு கைகுலுக்கிய கரம். இந்தக் கரம்தான் என் தம்பிக்கு கையெழுத்திட்டு வாக்குறுதியை வழங்கியுள்ளது"

என நேருவின் வாக்குறுதியைக் குறிப்பிட்டார்.

கடற்கரையில் முழங்கிய அண்ணா 1962ஆம் ஆண்டு இந்தியநாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினராகி ஆற்றிய முதல் உரையே ஒட்டுமொத்த அவையையும் கட்டிப் போட்டது. 'I belong to the Dravidian Stock' என்ற அவரது புகழ்பெற்ற உரை, மாநில மொழிகள் மீதான பிரதமர் நேரு உள்ளிட்ட ஆட்சியாளர்களின் பார்வையில் புதிய திருப்பத்தை உருவாக்கியது. 1963ஆம் ஆண்டு

> **இந்தி பேசாத மாநில மக்கள் விரும்புகிற வரை ஆட்சிமொழியாக ஆங்கிலம் நீடிக்கும் என்ற உறுதிமொழியை பிரதமர் நேரு வழங்கினார்.**

மே மாதம், **'இந்தி அச்சுறுத்தலை எதிர்ப்போம்'** என்று மாநிலங்களவையில் அண்ணா ஆற்றிய உரை, இந்தியை ஆட்சிமொழியாக்குவதால் இந்தியாவின் பிற மொழிகள் எப்படியெல்லாம் பாதிக்கப்படும் என்பதை தன் அழுத்தமான வாதங்களால் முன்வைத்தார்.

அந்நிய மொழியான ஆங்கிலத்தை ஏற்றுக்கொள்ளும்போது, இந்திய மொழியான இந்தியை ஏன் எதிர்க்கிறீர்கள் என்று 'அறிவு ததும்பி வழியும்' இன்றைய ஒன்றிய ஆட்சியாளர்களும் அவர்களின் கட்சியினரும் கேட்கிறார்கள். ஆங்கிலம் எல்லா மாநிலங்களுக்கும் அந்நிய மொழி. ஆனால், இந்தி சில மாநிலங்களுக்கு மட்டும் தாய்மொழி. தமிழ்நாடு உள்ளிட்ட மற்ற மாநிலங்கள் அனைத்திற்குமே அது அந்நிய மொழி.

இதனை நாடாளுமன்ற மாநிலங்களவையில் மிகத் தெளிவாக விளக்கிய பேரறிஞர் அண்ணா அவர்கள், **"இந்தி**

> **சமஸ்கிருதத்திற்குப் பதில் தமிழிலேயே கோவில்களில் அர்ச்சனை செய்யலாமா? தமிழும் செம்மையான மொழிதானே?'' என்று அவர்களைப் பார்த்துக் கேளுங்கள்!**

பேசும் மாநிலங்களின் மக்களுக்கு அதுவே தாய்மொழியாக இருக்கும். அதுவே அரசு மொழியாகவும் இருக்கும். அதுவே பயிற்று மொழியாகவும் இருக்கும். அதுவே மத்திய அரசின் மொழியாகவும் இருக்கும். இந்தி பேசும் மக்களுக்கு இவ்வளவு வாய்ப்புகள், உரிமைகளை வழங்கிவிட்டு, இந்தி பேசாத (மற்றமொழிகளைத் தாய்மொழியாகக் கொண்ட) எம் போன்ற மக்களுக்கு எவ்வளவு பாதிப்புகளை ஏற்படுத்துகிறீர்கள்?" என்று கேட்டார்.

அன்று அண்ணா கேட்டதைத்தான் நாமும் கேட்கிறோம். அண்ணா உருவாக்கிய இருமொழிக் கொள்கையே தமிழ்நாட்டில் நீடிக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறோம். 'காலம் மாறிவிட்டது அதனால் இந்தியைத் திணிப்போம்' என்கிறார்கள் இன எதிரிகள். **எத்தனை காலங்கள் மாறினாலும் அதற்கு ஈடுகொடுத்து நிற்கும் செம்மொழியாம் தமிழ் மீது இந்தி-சமஸ்கிருத ஆதிக்கத்திற்கு இடம் கொடுக்க மாட்டோம். உயிரைக் கொடுத்தேனும் தமிழைக் காப்போம்!**

(தொடரும்)

அன்புடன்
மு.க. ஸ்டாலின்

திருவள்ளுவர் ஆண்டு 2056
மாசி 15
27.02.2025.

திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

மக்கள் நலத்திட்டங்களோடு முதல்வரின் பிறந்தநாளை ஆண்டு முழுவதும் கொண்டாடுவோம்!

பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அறிக்கை!

திருவண்ணாமலை, மார்ச் 1 -

திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் தமிழ்நாடு முதலமைச்சரும், கழக தலைவருமான அண்ணன் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை மக்கள் நல திட்டங்களோடு. வருடம் முழுவதும் கொண்டாடிடுவோம் என்று பொதுப் பணித்துறை அமைச்சரும், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினருமான எ.வ.வேலு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில்...

சனாதன, புராதன குப்பைகளிலே புரண்டுகிடந்த தமிழ்சமுகத்தை மீட்டெடுத்த தந்தை பெரியார். பண்பாட்டு தளத்தையும், அரசியல் தளத்திற்கு கொண்டு வந்து, தாய் நாட்டிற்கு தமிழ்நாடு என்று பெயர் சூட்டிய பேரறிஞர் அண்ணா, இருவரையும் இரு கண்களாக கொண்டு அவர்களின் இலட்சியங்களை சட்டங்களாக்கி, தமிழ் சமுகத்தை ஒரு சர்வதேச சமூகமாக மாற்றி காட்டிய தலைவர் கலைஞர் ஆகிய இவர்களுக்கு ஏற்படாத ஒரு மிகபெரும் நெருக்கடியை, இந்தியாவில், குறிப்பாக தமிழகத்தில் உருவாக்கி இருக்கிற மதவாத, பாசிச ஒன்றிய அரசு. தமிழகத்தில் ஏற்பட்ட தேசிய பேரிடர் மற்றும் தமிழகத்திற்கு நியாயமாக தரவேண்டிய நிதி, மும்மொழி கொள்கையை ஏற்றால்தான், இந்தியை படித்தால்தான் தமிழ் நாட்டு மாணவர்களுக்கான கல்வி நிதியை விடிவிக்க முடியும் என்கிற எதேச்சதிகார ஒன்றிய அரசை திறமையாக எதிர்கொண்டு, கூட்டணி இயக்கங்கள் மட்டுமல்ல, எதிர் கட்சிகளும் பாராட்டுகிற திராவிட மாடல் அரசை நடத்திவரும், எட்டு கோடி தமிழர்களின் இதய நாயகன், உலகத்தமிழர்களின் ஒரே நம்பிக்கை, தமிழர்களின் எழுச்சி வடிவம் தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அண்ணன் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் மார்ச் 1 அன்று தமிழ்கூறும் நல்உலகத்தில் சிறப்பாக கொண்டாடப்பட இருக்கிறது.

சொன்னதை மட்டுமல்ல, சொல்லாத சாதனைகளான காலை உணவு திட்டம், புதுமைபெண் திட்டம், தமிழ்புதல்வன் திட்டம் என கொண்டு வந்து, தமிழக மாணவர்களால் அப்பா என அழைக்கப்படுகிற, நம் இனத்தலைவன் பிறந்தநாளை திருவண்ணாமலை வடக்கு, தெற்கு மாவட்டங்களில் உள்ள மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர், கிளை கழக நிர்வாகிகள், அணி சார்ந்த அமைப்பின் நிர்வாகிகள், மார்ச் 1 அன்று பிறந்த குழந்தை களுக்கு தங்க மோதிரம் அணிவிப்பது, கழக கொடியேற்றுவது, கழக அரசின் சாதனைகளை விளக்கி பொதுகூட்டங்கள் நடத்துவது, மக்களுக்கு தேவையான நல உதவிகளை செய்வது, மரம் நடுதல், நீர் நிலைகளை செப்பனிடுதல், இரத்ததானம் செய்தல், மருத்துவ முகாம் நடத்துதல் என மக்களின் தேவை அறிந்து உதவிகளை செய்து கழகத்தலைவரின் பிறந்தநாளை எழுச்சியாக கொண்டாடிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஓடிவந்த இந்தி பெண்ணே கேள், நீ நாடி வந்த கோழையுள்ள நாடு இதுவல்ல, ஓடிப்போ ஓடிப்போ என்றுரைத்தும், எப்பக்கம் வரும் இந்தி, எத்தனை பட்டாளம் கூட்டி வரும் இந்தி, வாருங்கள் நாட்டினரே, இந்தி பேயை விரட்டிடு வோம் என்ற தலைவர் கலைஞர் வழியில் இளைஞர் அணியினரும், மாணவர் அணியினரும் இந்தி எதிர்ப்பு கண்டன கூட்டங்கள், கருத்தரங்கங்கள் நடத்தி நம் கழக தலைவரின் பிறந்த நாளை எழுச்சியாக கொண்டாடிடுவோம் என கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மாநிலஇளைஞர் அணி செயலாளர் தமிழ்நாடு துணை முதல்வர்உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு ஆண்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கடமலைமயிலை ஒன்றியத்துக்கு உட்பட்ட கடமலைக்குண்டு பகுதியில் இளைஞர் அணி சார்பில் மாபெரும் கோலப் போட்டி நடைபெற்றது. இதனை தேனி தெற்கு மாவட்டக் கழக செயலாளரும் கம்பம் சட்டமன்ற உறுப்பினருமான ராமகிருஷ்ணன், ஆண்டிப்பட்டி சட்டமன்ற உறுப்பினர் மகாராஜன்ஆகியோர் துவக்கி வைத்தனர். உடன் மாநில இளைஞரணி துணைச் செயலாளர் ஜி.பி.ராஜா, மாநில தீர்மானக் குழு இணைச் செயலாளர் ஜெயக்குமார் மற்றும் ஒன்றிய செயலாளர்கள் வழக்கறிஞர் சுப்பிரமணி, தங்கபாண்டியன்,தெற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் செஞ்சுரி செல்வம். இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் பிரபாகரன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

காரைக்கால் ஏ.எம்.எச். நாஜிம் தாயார் மறைவு!

முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை.மார்ச் 1 –

முதலமைச்சர் , கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:

காரைக்கால் மாவட்டத் தி.மு.க. அமைப்பாளரும் சட்டமன்ற உறுப்பினருமான ஏ.எம்.எச். நாஜிம் அவர்களின் தாயார் திருமதி. நபிசா உம்மாள் அவர்கள் மறைந்த செய்தியறிந்து வருந்தினேன்.

அன்புகாட்டி, அரவணைத்து, ஆளாக்கிய அன்புத்தாயாரை இழந்து தவிக்கும் நாஜிம் அவர்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

பொன் கூட்டி வரும் முதல்வரின் பிறந்த நாளுக்கு முன் கூட்டி வாழ்த்துச் சொன்னேன்!

- கவிப்பேரரசு வைரமுத்து

மாண்புமிகு முதலமைச்சர்
மு.க.ஸ்டாலின் அவர்களை
முகாம் அலுவலகத்தில்
சந்தித்தேன்

வைரமுத்து படைப்புலகம் குறித்த
பன்னாட்டுக் கருத்தரங்கம்
'வைரமுத்தியம்' என்ற பெயரில்
16.03.2025 அன்று நிகழவிருக்கிறது

கருத்தரங்கில் நிறைவுரை ஆற்ற
இசைவு தெரிவித்திருக்கும்
முதலமைச்சருக்கு
அன்போடு
அழைப்பிதழ் தந்தேன்

ஒருவரை ஒருவர் பார்த்ததும்
இருவருமே மலர்ந்துவிடுகிறோம்

அவரது
பாசாங்கில்லாத பாசம்
எப்போதும் பரவசப்படுத்துகிறது

பொன்கூட்டி வருகிற
பிறந்த நாளுக்கு
முன்கூட்டி வாழ்த்துச் சொன்னேன்

விழாகுறித்து விசாரித்தார்

கருத்தரங்கில்
இந்திய அளவிலும்
உலக அளவிலும்
புகழ்மிக்க அறிஞர் பெருமக்கள்
ஆய்வுக் கட்டுரைகள்
வாசிக்கிறார்கள்

உச்சநீதிமன்றத்தின்
மாண்பமை நீதியரசர்
ஆர்.மகாதேவன்
கருத்தரங்கத்தைத்
தொடங்கி வைக்கிறார்

மறைமலை இலக்குவனார்
ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த

'Vairamuthu's Mahakavithai'
என்ற ஆங்கில நூலை
ஒன்றிய முன்னாள் அமைச்சர்
ப.சிதம்பரம் வெளியிடுகிறார்;
மலேசிய முன்னாள் அமைச்சர்
டத்தோஸ்ரீ எம்.சரவணன்
முதற்படி பெறுகிறார்

வைரமுத்தியம் என்ற
கருத்தரங்கக்
கட்டுரைத் தொகுப்பை
மாண்புமிகு முதலமைச்சர்
வெளியிடுகிறார்;
எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி
முதற்படி பெறுகிறார்

53 ஆண்டுகள்
நுரைக்க நுரைக்க ஓடிவந்த
ஓட்டப் பந்தயத்தில்
எனக்கு வழங்கப்படவிருக்கும்
ஒருகோப்பைப் பழச்சாறுதான்
இந்தப்
பன்னாட்டுக் கருத்தரங்கம்

விழாவில் பங்கேற்கும்
அறிவுலகத்தை
நெற்றி நிலம்பட வணங்குகிறேன்